## மாமல்லபுரம் சிறப்புநிலை பேரூராட்சி
## செங்கல்பட்டு மாவட்டம்

**ந.க.எண்.100 / 2022/அ1** **நாள்.03.06.2022**

## குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
## ( Two Cover System)

செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரம் சிறப்புநிலை பேரூராட்சியில் மூலதன மானியத்திட்டம் 2022–23ன் கீழ் பின்வரும் பணிகளை செய்வதற்கு கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் 15.06.2022–ம் தேதி புதன்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை பேரூராட்சி அலுவலகத்தில் மாமல்லபுரம் பேரூராட்சி செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவர்களால் ஒப்பந்தபுள்ளிகள் பெற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினமே பிற்பகல் 3.30 மணிக்கு வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி நமுனா படிவம் கீழ்குறிப்பிட்டுள்ள விலையில் 14.06.2022ம் தேதி பிற்பகல் 3.00 மணி வரை அலுவலக நாட்களில் கிடைக்கும். வைப்புத் தொகை 14.06.2022 அன்று பிற்பகல் 3.00 மணிக்குள் செலுத்தப்பட வேண்டும். வைப்புத் தொகை செலுத்திய ரசீது ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்பட வேண்டும். ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த இதர நிபந்தனைகள் மற்றும் விவரங்களை பேரூராட்சி அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

| வ. எண். | வேலையின் விவரம் | மதிப்பீட்டு தொகை ரூ. லட்சத்தில் | காப்புறுதி தொகை மதிப்பீட்டில் 1 % | ஒப்பந்தப்புள்ளி நமுனா விலை | பணி முடிக்கும் காலம் |
|---|---|---|---|---|---|
| I | **சாலைகள் மற்றும் நடைபாதை மேம்படுத்துதல்** | | | | |
| 1 | பேரூராட்சிக்குட்பட்ட சிவகாமி நகர், சிவன் கோயில் தெரு, திருக்கழுக்குன்றம் சாலை குறுக்குத் தெருக்கள், வெண்புருஷம் மீனவர் பகுதி மற்றும் கோவளம் சாலை குறுக்கு ஆகிய பகுதிகளில் உள்ள பழுதடைந்த தார்சாலைகளை சீர் செய்தல் | 35.50 | 35500 | 10040 | 30 நாட்கள் |
| 2 | பேரூராட்சிக்குட்பட்ட ஒத்தவாடை குறுக்குத்தெரு, மாமல்லபுரம் மீனவர் பகுதி , அம்பெத்கார் தெரு, அண்ணல் காந்தி தெரு, தலையாரி பொய்கை தெரு, திருவள்ளுவர் தெரு மற்றும் தில்லையாடி வள்ளியம்மை தெருவில் பழுதடைந்த சிமெண்ட் சாலை மற்றும் பேவர் பிளாக் சாலைகளை சீர் அமைத்தல் | 32.00 | 32000 | 10040 | 30 நாட்கள் |
| 3 | பூஞ்சேரி M.G.R. குறுக்குத் தெருக்களில் மண்சாலையை பேவர் பிளாக் சாலைகளாக அமைத்தல் | 92.00 | 92000 | 16733 | 30 நாட்கள் |
| 4 | பேரூராட்சிக்குட்பட்ட ஐந்துரதம் சாலையில் பேவர் பிளாக் நடைபாதை அமைத்தல் | 9.40 | 9400 | 3347 | 30 நாட்கள் |
| 5 | கோவளம் சாலை முதல் இ.சி.ஆர் இணைப்பு சாலை மற்றும் திருக்கழுக்குன்றம் சாலையின் பக்கவாட்டில் இரண்டு புறமும் நடைபாதை அமைத்தல். | 220.00 | 220000 | 16733 | 30 நாட்கள் |
| 6 | பேரூராட்சிக்குட்பட்ட இசிஆர் சாலை, பழைய கல்பாக்கம் சாலை, அரசு மருத்துவமனை சாலை மற்றும் பூஞ்சேரி சாலை ஓரங்களில் முட்புதர்களை அகற்றி பள்ளங்களை கிராவல் கொண்டு பக்கவாட்டில் நிரப்புதல் | 16.20 | 16200 | 6673 | 30 நாட்கள் |
| | மொத்தம் | **405.10** | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| II | **குளம் மற்றும் பூங்கா மேம்பாடு செய்தல்** | | | | |
| 1 | மாமல்லபுரம் பேரூராட்சிக்குட்பட்ட பொய்கை குளம் (S.No.81/124) சீரமைத்தல் பணி செய்தல் | 95.00 | 95000 | 16733 | 30 நாட்கள் |
| 2 | தேவனேரி இசிஆர் சந்திப்பு சாலையோர பூங்கா, இசிஆர் கோவளம் சாலையோர பூங்கா ,கடற்கரை அருகில் திருவள்ளுவர் சிலை பூங்கா மேம்பாடு செய்தல். | 65.00 | 65000 | 16733 | 30 நாட்கள் |
| | மொத்தம் | **160.00** | | | |
| III | **குப்பை தொட்டி, திடக்கழிவு மேலாண்மை, கழிவறை** | | | | |
| 1 | மாமல்லபுரம் பேரூராட்சிக்குட்பட்ட முக்கிய 15 இடங்களில் வைக்க குப்பைத்தொட்டிகள்100 (1x4எண்ணிக்கை) கொள்முதல் செய்தல் | 34.00 | 34000 | 10040 | 30 நாட்கள் |
| 2 | மாமல்லபுரம் பேரூராட்சிக்குட்பட்ட இசிஆர் சாலை A2B அருகில் கழிவறை பராமரிப்பு மற்றும் மேம்பாடு செய்தல் | 4.20 | 4200 | 1673 | 30 நாட்கள் |
| 3 | வார்டு எண்.7 கடற்கரை சாலையில் உள்ள ஆரோவில் கழிப்பிடத்தில் சுற்றுலா பயணிகளின் வசதிக்காக புதியதாக கழிவறை மற்றும் குளியலறை கட்டுதல் | 32.00 | 32000 | 10040 | 30 நாட்கள் |
| 4 | பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தற்காலிக கழிப்பிடங்கள் வாடகை அடிப்படையில் அமைத்தல் (10 இடம் 40 நாட்களுக்கு) | 15.90 | 15900 | 6673 | 30 நாட்கள் |
| 5 | திடக்கழிவு மேலாண்மை வளமீட்பு பூங்கா பகுதியில் Shredder Machine with Conveyor,Belt Conveyor Seiver and Bailing Machine அமைத்தல். | 22.00 | 22000 | 6673 | 30 நாட்கள் |
| | மொத்தம் | **108.10** | | | |
| IV | **குறியீட்டு பலகை மற்றும் பேரூந்து நிறுத்தம்** | | | | |
| 1 | மாமல்லபுரம் பேரூராட்சிக்குட்பட்ட 1 முதல் 15 வார்டுகளில் உள்ள அனைத்து தெருக்களிலும் Sign Board அமைத்தல். | 25.00 | 25000 | 6673 | 30 நாட்கள் |
| 2 | மாமல்லபுரம் பேரூராட்சிக்குட்பட்ட புலிக்குகை அருகில், தேவனேரி ,இசிஆர் கோவளம் சாலை சந்திப்பு மற்றும் FOUR POINT SHERITON HOTEL அருகில் சாலை குறியீட்டு பலகைகள் (Stainless Steel Sign Board )அமைத்தல் | 17.50 | 17500 | 6673 | 30 நாட்கள் |
| 3 | மாமல்லபுரம் பேரூராட்சிக்குட்பட்ட அனைத்து சாலைகளிலும் பக்கவாட்டு சுவர்களில் உள்ள விளம்பரம் மற்றும் அறிவிப்புகளை அப்புறப்படுத்தி வர்ணம் அடித்து வாசகம் மற்றும் ஓவியம் வரைதல் | 38.00 | 38000 | 10040 | 30 நாட்கள் |
| 4 | மாமல்லபுரம் பேரூராட்சிக்குட்பட்ட சிவகாமி நகர், சிவன் கோயில் தெரு, திருக்கழுக்குன்றம் சாலை, வெண்புருஷம் மீனவர் பகுதி, வெண்புருஷம் நீரேற்றும் நிலையம் சாலை, ஆணைக்குட்டி தெரு மற்றும் திடக்கழிவு வளம்மீட்பு பூங்கா சாலைகளில் Road Marking மற்றும் Road Reflector அமைத்தல் | 20.00 | 20000 | 6673 | 30 நாட்கள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | மாமல்லபுரம் பேரூராட்சிக்குட்பட்ட கோவளம் இசிஆர் சந்திப்பில் உள்ள 2 எண்ணிக்கை பேருந்து நிறுத்தங்கள், பூஞ்சேரி இசிஆர் சந்திப்பில் 2 எண்ணிக்கை பேரூந்து நிறுத்தம் மற்றும் பூஞ்சேரி திருக்கழுக்குன்றம் சாலை இசிஆர் சந்திப்பில் 1 எண்ணிக்கை பேருந்து நிறுத்தம் ஆகிய 5 பேருந்து நிறுத்தங்கள் மேம்பாடு செய்தல் | 10.70 | 10700 | 6673 | 30 நாட்கள் |
| | **மொத்தம்** | **111.20** | | | |
| V | **தெருவிளக்குகள் அமைத்தல்** | | | | |
| 1 | மாமல்லபுரம் பேரூராட்சியில் ஏற்கனவே உள்ள மின்கம்பத்தில் புதியதாக LED விளக்குகள் 25W கல்பாக்கம் சாலையில் சேரியட் ஓட்டல் முதல் நிர்வணா ஓட்டல் வரை, பழைய திருக்கழுக்குன்றம் சாலை மேம்பாலம் முதல் அருண் எக்ஸெல் வரை , ECR சாலை பூஞ்சேரி அரசு மருத்துவமனை முதல் Four point Sheraton By pass வரை , கோவளம் சாலை By pass முதல் ஐடியல் பீச் வரை மற்றும் ஐந்து ரதம் சாலை கலங்கரை விளக்கம் முதல் ஐந்துரதம் வரை –79 எண்ணிக்கை அமைத்தல் | 2.25 | 2250 | 1673 | 30 நாட்கள் |
| 2 | மாமல்லபுரம் பேரூராட்சியில் ஏற்கனவே உள்ள மின்கம்பங்களுக்கு பெயிண்டிங் அடித்தல், சுவிட்ச் போர்டுகள், பழுதடைந்த டைமர் சுவிட்சுகளை மாற்றி அமைத்தல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளுதல் | 4.10 | 4100 | 1673 | 30 நாட்கள் |
| | மொத்தம் | 6.35 | | | |
| | **பெருமொத்தம்** | **790.75** | | | |

<u>**நிபந்தனைகள்**</u>

1. மேற்படி ஒப்பந்தப்புள்ளி போடுவதற்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 14.06.2022ம் தேதி வரை கீழ்கண்ட இணைய தளத்தில் இருந்து கட்டணம் இல்லாமல் எடுத்துக் கொள்ளலாம். மேற்படி படிவத்தில் இல்லாத ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

   **https://tntenders.gov.in, www.tenders.tn.gov.in**

2. இரு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படும். ஒரு உறையில் (தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி ) "Technical Bid " என்று குறிப்பிட்டு அந்த உறையில் முன் வைப்புத் தொகைக்கான வங்கி கேட்பு வரைவோலை , மதிப்பு கூட்டு வரி (VAT) தீர்வை சான்று, தகுதி மற்றும் இதர தகவல்களை வைத்து முத்திரையிடப்பட வேண்டும். மற்றொரு உறையில் ( விலை ஒப்பந்தப்புள்ளி ) " Price Bid " என்று குறிப்பிட்டு அதில் நிரப்பப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவத்தினை வைத்து முத்திரையிடப்பட வேண்டும். பின்பு இரு உறைகளையும் ஒரு பெரிய உறையில் வைத்து முத்திரையிட்டு அதில் ஒப்பந்தப்புள்ளி அளிப்பவரின் முகவரியினை குறிப்பிட்டு அளிக்கப்பட வேண்டும். உள் மற்றும் வெளி உறைகளில் பெறுபவர் முகவரியில் (" செயல் அலுவலர், மாமல்லபுரம் பேரூராட்சி" ) " Executive Officer, Mamallapuram Town Panchayat " என்று குறிப்பிட வேண்டும். மேலும் எந்த பணிக்கான ஒப்பந்தப்புள்ளி என்பதை கீழ்கண்டவாறு குறிப்பிட வேண்டும். வெளியுறை முத்திரையிடப்படாமலும் மேற்கண்டவாறு குறிப்பிடப்படாமலும் இருக்கும் பட்சத்தில் ஒப்பந்தப்புள்ளி தவறுதலாக மாறிவிடுவதற்கோ அல்லது முன் கூட்டியே திறக்கப்படுவதற்கோ ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கும் அலுவலர் பொறுப்பேற்கமாட்டார்.

3. ஒப்பந்தப்புள்ளிகள் 15.06.2022 அன்று பிற்பகல் 3.00 மணி வரை மட்டுமே பெற்றுக் கொள்ளப்படும். குறிப்பிட்ட நேரத்திற்கு பிறகு பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படாமல் ஒப்பந்தப்புள்ளி அளித்தவருக்கே திருப்பி அனுப்பப்படும். மேற்குறிப்பிட்டவாறு ஒப்பந்தப்புள்ளி பெறுவதற்கு குறிப்பிடப்பட்ட இறுதி நாளில் விடுமுறை அறிவிக்கப்படுமாயின் அதற்கடுத்த அலுவலக வேலை நாளில் மேற்குறிப்பிட்ட அதே நேரத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படும்.

4. ஒப்பந்ததாரர்கள் தாங்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளிகளை மாற்றிடவோ அல்லது திரும்ப பெற்றிடவோ வேண்டுமாயின், ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு குறிப்பிடப்பட்டுள்ள கடைசி நேரத்திற்கு முன்னதாக எழுத்து மூலமாக அறிவிப்பு ஒன்றை வழங்கி ஒப்பந்தப்புள்ளிகளை திரும்ப பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளிகளை மாற்றி திரும்ப வழங்கும் நேர்வில் உள் மற்றும் வெளி உறைகளில் கூடுதலாக " Withdrawal / Modification " என்று குறிப்பிட்டு வழங்கப்பட வேண்டும்.

5. பெறப்பட்ட அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளும் 15.06.2022 அன்று பிற்பகல் 3.30 மணிக்கு மாமல்லபுரம் பேரூராட்சி அலுவலத்தில் வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் மாமல்லபுரம் பேரூராட்சி செயல் அலுவலராலோ அல்லது அவரால் அனுமதிக்கப்பட்ட அலுவலராலோ திறக்கப்படும். மேற்குறிப்பிட்ட நாளன்று விடுமுறை அறிவிக்கப்படுமாயின் அதற்கடுத்த அலுவலக வேலை நாளில் மேற்குறிப்பிட்ட அதே நேரத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும்.

6. ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும்போது முதலில் "Technical Bid " என்று குறிப்பிடப்பட்டுள்ள உறை திறக்கப்பட்டு அதில் முன்வைப்பு தொகைக்கான கேட்பு வரைவோலை, மதிப்பு கூட்டு வரி (VAT) தீர்வை சான்று, பணியில் முன் அனுபவம், முன்வைப்புத் தொகைக்கு விலக்களிக்கப்பட்டிருப்பின் அதற்கான சான்று மற்றும் இதர தகுதிகளுக்கான ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு ஒப்பந்த நிபந்தனைகளுக்குட்பட்டு இருந்தால் மட்டுமே " Price Bid " என்று குறிப்பிடப்பட்டுள்ள உறை திறக்கப்பட்டு முடிவு செய்யப்படும். அவ்வாறு இல்லாதபட்சத்தில் " Price Bid " உறை திறக்கப்படாமல் நிராகரிக்கப்பட்டு ஒப்பந்ததாரருக்கு திருப்பி அனுப்பப்படும்.

7. ஒப்பந்ததாரர்கள் முன் வைப்புத் தொகையாக (EMD) மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு ஒப்பந்த மதிப்பு தொகையில் 1% தொகைக்கு ஏதேனும் ஒரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் " Executive Officer, Mamallapuram Town Panchayat payable at Mamallapuram" என்ற முகவரிக்கு வங்கி பணவிடை அல்லது வங்கி கேட்பு வரை வோலையினை இணைத்து ஒப்பந்தப்புள்ளி அளிக்க வேண்டும். அவ்வாறு இல்லாத முன் வைப்பு தொகை ( EMD ) ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

8. ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படாதபட்சத்தில் ஒப்பந்ததாரர்களின் முன் வைப்புத் தொகை ( EMD) ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்றுக் கொள்வதற்கான காலம் முடிவடைந்த 28 நாட்களுக்குள் திரும்ப அளிக்கப்படும்.

9. ஒப்பந்ததாரர்கள் குறைந்தபட்சம் இரண்டாம் நிலை (Class II) ஒப்பந்ததாரர்களாக மாநில அரசின் எந்த துறையிலோ, வாரியத்திலோ அல்லது அரசு சார்ந்த நிறுவனங்களிலோ பதிவு செய்யப்பட்டு நடைமுறையில் இருக்க வேண்டும். அதற்கான ஆவணங்களை இணைக்க வேண்டும்.

10. ஒப்பந்ததாரர்கள் கட்டுமான பொறியியல் துறையில் குறைந்த பட்சம் கடந்த ஐந்தாண்டுகள் ( 2017–18 முதல் 2022–2021 வரை ) அனுபவம் இருக்க வேண்டும். மேலும் கடந்த ஐந்தாண்டுகளுக்கு தணிக்கை செய்யப்பட்ட (ஐந்தொகை தாள்) Balance sheet யை ஒப்பந்தபுள்ளியுடன் இணைக்க வேண்டும்.

11. ஒப்பந்ததாரர்கள் பணிகள் செய்வதற்கு போதுமான நிதியிருப்பு உள்ளது என்பதற்காக ஏதாவது ஒரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் தற்போது அளிக்க இருக்கும் ஒப்பந்த மதிப்பில் 15 சதவிகிதத்திற்கு குறைவில்லாமல் நிதியிருப்பு உள்ளதிற்கு போதுமான வங்கி ஆவணங்களை ஒப்பந்தபுள்ளியுடன் இணைக்க வேண்டும் (Pass Book Xerox).

12. ஒப்பந்ததாரர்களால் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் அரசு சான்றுரைஞ்சரால் (Notary Public ) சான்றொப்பம் இடப்பட்டிருக்க வேண்டும்.

13. வணிக வரித் துறையில் அன்மையில் TIN தாக்கல் செய்யப்பட்டதற்கு தகுந்த ஆதாரம் இணைக்கப்பட வேண்டும்.

14. ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தின் ஒவ்வொரு பக்கங்களிலும் ஒப்பமிட வேண்டும். ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பமிட யாருக்காவது அங்கீகாரம் அளித்திருந்தாலோ அல்லது பங்குதாரருக்கு பொறுப்பு நியமனம் செய்யப்பட்டிருந்தாலோ அதற்கான அதிகாரபூர்வமான ஆவணங்கள் அளிக்கப்பட வேண்டும்.
15. ஒப்பந்ததாரர்கள் மேற்குறிப்பிட்ட அனைத்து நிபந்தனைகளின்படி தகுதியுடையவராக இருப்பினும் தவறான ஆவணங்கள் அளிக்கப்பட்டிருந்தது, எடுத்த பணிகளை செய்யாமல் இருந்தது அல்லது தரமாக முடிக்கப்படாமல் இருந்தது அல்லது மிகவும் காலதாமதமாக முடித்திருந்தது, நீதிமன்ற சிக்கல் அல்லது நிதியிழப்பு ஏற்படுத்தியிருந்தது போன்ற நிகழ்வுகள் கண்டறியப்பட்டால் அவர்கள் தகுதியிழக்க செய்யப்படுவார்கள்.
16. ஏற்கனவே இப்பேரூராட்சியின் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டு பணியினை எடுத்த ஒப்பந்ததாரர்கள் பணி முடிக்கும் காலத்தை கடந்தும் பணி முடிக்காதவர்கள் இந்த ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள வழிவகை இல்லை.
17. பொதுவாக தகுதிகளின் அடிப்படையில் குறைந்த விலை குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படும். அப்போது ஒப்பந்ததாரர் ஏற்கனவே செலுத்தியுள்ள 1 % முன் வைப்புத் தொகையுடன் ( EMD ) மேலும் கூடுதலாக ஒப்பந்த மதிப்பில் 1 % தொகையினை பாதுகாப்பு வைப்புத் தொகையாக ( Security Deposit ) செலுத்த வேண்டும்.
18. ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்கப்படாதவரையில் சட்ட வகைகளுக்குட்பட்டு, எந்தநேரத்திலும் எந்தவொரு ஒப்பந்தப்புள்ளியையும் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ மற்றும் ஒப்பந்த நடைமுறைகளை ரத்து செய்யவோ அல்லது அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளையும் நிராகரிக்கவோ பேரூராட்சி மன்றத்திற்கு அதிகாரம் உள்ளது.
19. பணிகளின் ஒவ்வொரு நிலைகளிலும் உதவி செயற்பொறியாளரின் சோதனை அளவு பெறப்பட வேண்டும்.
20. பொறியியல் விதிமுறைப்படி பணிக்கான ஒப்பந்த காலத்திற்குள் பணியினை ஒப்பந்ததாரர் மந்தமான முறையில் மிக மெதுவாக பணியில் முன்னேற்றம் காண்பிக்கும் பட்சத்தில் (Penalty for Slow Progress) அபராதம் ஒப்பந்த மதிப்பில் 5% விதித்து பட்டியல் தொகையில் ஈடுசெய்யப்படும்.
21. பணி மேற்கொள்வதற்கு முன் நிலையிலும், பணியின் ஒவ்வொரு கட்டத்திலும் புகைப்படங்கள் எடுத்து ஆவணப்படுத்தப்பட வேண்டும்.
22. பணி குறித்த விபரங்கள் அடங்கிய தரமான பலகைகள் 4அடி x $2^{1/2}$அடி (1.20M x 0.75m) அளவில் வைக்கப்பட்டு அதனை புகைப்படம் (Digital Photo) எடுத்து, இப்பேரூராட்சி அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.
23. பணி மேற்கொள்ளவிருக்கும் இடத்தினை பணி ஆரம்பிப்பதற்கு முன்னரும், பணி நடைபெறும் போதும் மற்றும் பணி முடிந்த பின்னரும் புகைப்படம் (Digital Photo) எடுக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட வேண்டும். எடுக்கப்படும் மூன்று புகைப்படமும் ஒரே இடத்தை (Same Location) காட்டும் படியாக இருத்தல் வேண்டும்.
24. ஒவ்வொரு பட்டியல்களிலும் அரசு விதிமுறைகளின்படி வருமானவரி, விற்பனை வரி மற்றும் தொழிலாளர் நல நிதி தொகை பிடித்தம் செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட துறைகளில் செலுத்தப்படும்.
25. ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்ட ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்த நிபந்தனைகளுக்குப்பட்டு ரூ.20/க்கான முத்திரை தாளில் செயல் அலுவலருடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.
26. அ) இத்திட்டப்பணிகள் முடிக்கப்பட்டவுடன் மூன்று ஆண்டுகளுக்கு குறையாத காலத்திற்கு இப்பணிகளில் ஏற்படும் குறைபாடுகளை இப்பணியினை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரரே தனது சொந்த செலவிலேயே சீரமைத்து தரப்படல் வேண்டும்.

ஆ) பணிகளுக்கு உபயோகப்படுத்தப்படும் பொருட்கள் அனைத்தினையும், அரசு தொழில் நுட்பக்கல்லூரியில் ஆய்வு செய்து சான்றிதழ் பெற வேண்டும்.

இ)மேற்படி திட்டத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ளும்போது ஒவ்வொரு நிலைகளிலும் பணியின் தரம் அரசு தொழில் நுட்பக்கல்லூரியில் ஆய்வு செய்து உறுதி செய்யப்பட வேண்டும்.

27. அனைத்து பணிகளுக்கும் Per chart படிவத்தினை பணி ஆணை வழங்கிய ஒரு வாரத்திற்குள் தயாரித்து இயக்குநகரத்திற்கு அனுப்ப வேண்டும் அதன் படி பணியினை முடிக்க வேண்டும்.
28. தரக்கட்டுபாடு உபகரணங்களை (Sieve, weighing balance, Camber board, Spirits with thread, Measuring Tap, Crow bar, Metric gauge for metal stock measurement, Bituman extractor for binding content ) வைத்து இருக்க வேண்டும்.
29. ஒப்பந்தப்புள்ளிகள் அளிப்பது குறித்து வேறு ஏதேனும் தெளிவுரைகள் வேண்டுமாயின் மாமல்லபுரம் பேரூராட்சி அலுவலகத்தில் அலுவலக வேலை நாட்களில் வேலை நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

3/6/22

செயல் அலுவலர்,
மாமல்லபுரம் சிறப்பு நிலை பேரூராட்சி
செங்கல்பட்டு மாவட்டம்.

3/6/2022

பெறுநர் :–

பதிவுபெற்ற அனைத்து ஒப்பந்ததாரர்கள்.

நகல் :–

1. மாவட்ட ஆட்சித் தலைவர், செங்கல்பட்டு மாவட்டம் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
2. காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகள் உதவி இயக்குநர், அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
3. மாவட்ட கண்காணிப்பாளர் காஞ்சிபுரம் அவர்களின் தகவலுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
4. சட்ட மன்ற உறுப்பினர் திருப்போரூர் தொகுதி அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
5. உதவி செயற்பொறியாளர் (பேரூராட்சிகள்), காஞ்சிபுரம் மண்டலம் அவர்களின் தகவலுக்காக.
6. உதவி பொறியாளர், மாமல்லபுரம் பேரூராட்சி.
7. செயல் அலுவலர்,மாமல்லபுரம் பேரூராட்சி விளம்பர பலகையில் விளம்பரம் செய்ய.
8. அலுவலக விளம்பர பலகைக்கு.
9. கோப்புக்கு.